6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும் கொண்ட) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க் கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தெரிந்தெடுக்கப் படுகிறார்கள் :—

1. திரு. பழனிவேல்ராஜன்.
2. திரு. என். கணபதி.
3. திரு. சொ. காவேரிமணியம்.
4. திரு. துரைமுருகன்.
5. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்).
6. திரு. என். ராஜாங்கம்.
7. திரு. கே. பி. கந்தசாமி.
8. திரு. கே. பழனிவேலன் (வரகூர் தொகுதி).
9. திரு. ஆ. பரந்தாமன்.
10. திரு. எம். சுப்பிரமணியன்.
11. திரு. செ. கந்தப்பன்.
12. திரு. கே .எஸ். கோதண்டராமையா.
13. திரு. இ. எஸ். தியாகராஜன்.
15. திருமதி த. ந. அனந்தநாயகி.
15. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
16. திரு. கே. கந்தசாமி.
17. திரு. கே. டி. கே. தங்கமணி .
18. திரு. எம். ஏ. லத்தீப்.

---

* 1973 பிப்ரவரி 12-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

19. டாக்டர் எச். வி. ஹாண்டே.

20. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

இந்தத் தீர்மானத்தை மன்றத்தினுடைய ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கோருகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி இந்த மன்றத்திலே பல்வேறு அரசியல் கட்சிகளின் கருத்துக்களைத் தெரிந்து செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே பெரும்பாலும் கட்சித் தலைவர்கள் எல்லாம் இதிலே அங்கம் பெற்றிருக்கிறார்கள். தமிழ் நாட்டில்தான் இன்றைக்கு நம்முடைய அரசியல் வாழ்வை மக்கள் மன்றத்தில் தூய்மையான வாழ்வாக நிரூபித்துக் காண்பிப்பதற்கு ஒரு வாய்ப்புத் தரும் வண்ணம் இச்சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே பல்வேறு கருத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்துக்கள் எப்படி எப்படி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற செய்திகளை எல்லாம் இந்தப் பொறுக்குக் குழுவின் முன்னால் ஆலோசிக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்தாகும்.

இன்றைக்கு ஜனநாயக ஆட்சியில் ஒருவரையொருவர் குற்றம் சொல்லுவதை விட மக்கள் மன்றத்திலே அரசியலில் ஈடுபட்டிருக்கின்ற தலைவர்களிடத்தில் நம்பிக்கை ஏற்பட, ஒரு நாணயமான அரசியலை நடத்திச் செல்லுகிறோம் என்பதை நிரூபிக்க இது வாய்ப்பாக இருக்குமென்றுதான் நான் கருதுகிறேன். இந்த மசோதாவிலே நாம் விரும்புகின்ற அத்தனையும் இல்லாவிட்டாலும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் ஆலோசித்து என்னென்ன கருத்துக்களை அவர்கள் இணைத்துக் கொள்ளச் சொல்லுகிறார்களோ அத்தனையையும் இணைத்துக் கொள்ள அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் திறந்த மனத்துடன் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரை உயர்நீதிமன்ற நீதிபதி அளவில் ஒருவரைப் போட்டுவிடுகின்ற காரணத்தால் இதற்குத் தனிப் பெருமை சேர்க்கப்பட்டிருக்கிறது என்றுதான் கருதுகிறேன். இந்த சட்டமுன்வடிவைப் பொறுத்தவரை நீண்ட விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன். பெரும்பாலும் குழுவிலே அங்கம் வகிக்கின்றவர்கள் சட்ட மன்றத்தில் பேசுவது வாடிக்கையல்ல.

அதல்லாமல் அரசாங்கத்தின் கொள்கையை இதில் அப்படியே ஏற்க வேண்டும் என்பது எங்கள் பிரச்னை அல்ல. எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்துதான் இந்தச் சட்டத்தை உருவாக்கவேண்டுமென்று கருதுகிறோம்.

இந்தச் சூழ்நிலையை எல்லாம் எண்ணிப் பார்த்து அடுத்தாற்போல் ஒரு முக்கியமான மசோதாவை நிறைவேற்றவேண்டும், இன்று கடைசி நாள் என்பதை எண்ணிப் பார்த்து இதில் யாருமே பேசாது இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி வைப்பார்களேயானால் மிக விரைவில் இந்த மசோதாவினை முடித்துக்கொண்டு அடுத்த மசோதாவிற்குச் செல்ல வாய்ப்பிருப்பதால் எல்லோரும் இதை ஏற்று பொறுக்குக்குழுவிற்கு விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் 139 (1)-வது விதிக்கிணங்க இச்சட்டமுன்வடிவின் பொறுப்பிலுள்ள மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் உறுப்பினராக நான் நியமிக்கிறேன்.

(5) அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Speaker, Sir, I move—

'That item III—Government Motion be taken up before item (1) under 'Government Bills'.

The motion was put and carried.

(ஆ) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் விவர அட்டவணைக்கான வரைவுத் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71) 431 (3) பிரிவின்கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால், மேற்படி சட்டத்தின் II -ஆம் விவர அட்டவணையை மாற்றிச் செய்யக் கருதப்பட்டுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

வரைவுத் திருத்தம்.

"1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71), II -ஆம் விவர அட்டவணையில் உள்ள இரண்டாவது வரம்பு நிபந்தனையின் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் 17 (1) விதியில் IX -வகுப்பு என்பதும் அதன் தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட வேண்டும்."